DEPOSITION OF WITNESS
IN THE COURT OF SUB COURT, USILAMPATTI.

| | | |
|---|---|---|
| Miscellaneous case No: | : S.C.No. 253 / 2022 |
| Preliminary Register | : |
| Sessions | : |
| Deposition of witness of | : P.W. 9 |
| Name | : வேலுச்சாமி |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.06.2024.

எதிரி ஆஜர். -----

**முதல் விசாரணை:**

நான் உதவி இயக்குநர் மற்றும் ஆவண ஆய்வு நிபுணராக மதுரை வட்டார தடய ஆய்வகத்தில் பணிபுரிந்து வருகிறேன். எங்கள் ஆய்வகத்திற்கு கு.எண்.352-2019 உசிலம்பட்டி தாலுகா காவல் நிலையம் தொடர்புடைய வழக்கு ஆவணங்கள் தாசில்தார், உசிலம்பட்டி அவர்களால் 11.12.2019 அன்று பெண் முதல் நிலை காவலர் 2162 திருமதி. வனிதா என்பவர் மூலம் மூடி முத்திரையிடப்பட்ட காகித உறையில் வைத்து பெறப்பட்டது. அந்த ஆவணங்கள் வருமாறு 1. இறந்து போன பாலாஜி என்பவர் எழுதிய கடிதம், அதற்கு எங்கள் ஆய்வகத்தில் க்யு 1 மற்றும் க்யு 2 என்று குறியீடுகள் தரப்பட்டன. அதே நபர் இடைநிலை தேர்வு எழுதிய போது உள்ள வினாத்தாள்களுக்கு பக்கம் 1 முதல் 4, அவற்றிற்கு முறையே ஏ1 முதல் ஏ5 வரை எங்கள் ஆய்வகத்தில் குறியீடுகள் தரப்பட்டன. 3. அதே நபர் காலாண்டு பொதுத்தேர்வு எழுதிய தாள்கள் பக்கம் 1 முதல் 4 அவற்றிற்கு முறையே ஏ6 முதல் ஏ9 வரை குறியீடுகள் எங்கள் ஆய்வகத்தில் தரப்பட்டன. மேலும் அதே நபர் எழுதிய பாக்கியா 3டி beutiful என அச்சிடப்பட்ட நோட்-1, அதில் உள்ள கையெழுத்துக்களுக்கு ஏ10 முதல் ஏ27 வரை எங்கள் ஆய்வகத்தில்

குறியீடுகள் தரப்பட்டன. இவ்வாறு குறியீடுகள் செய்யப்பட்ட பிறகு சர்ச்சைக்குரிய கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பங்களை (க்யு1 மற்றும் க்யு2) ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பங்களோடு (ஏ1 முதல் ஏ27) ஒப்பீடு அறிவியல் முறையில் செய்த போது ஒத்துக்கொள்ளப்பட்ட கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பங்கள் (ஏ1 முதல் ஏ27) சர்ச்சைக்குரிய கையெழுத்துக்கள் மற்றும் கையொப்பங்கள் (க்யு1 மற்றும் க்யு2) ஆகியவற்றை உருவாக்கியவர் ஒரே நபர் தான் என்று அறிக்கை வழங்கியுள்ளோம். நாங்கள் வழங்கிய அறிக்கை அ.சா.ஆ.3. அதற்கான விளக்கம் எங்கள் ஆய்வக அறிக்கையில் காரண தாளில் 6 வரிசைகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி காரண விளக்கம் அ.சா.ஆ.4. இதுசம்மந்தமாக என்னை ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல்துறை ஆய்வாளர் மூலம் இந்த கடிதம் எனக்கு அனுப்பவில்லை என்றால் சரிதான். 02.12.2019ம் தேதி இந்த கடிதம் கைப்பற்றப்பட்டதாக என்னிடம் தாக்கல் செய்த பெண் காவலர் வனிதா மூலம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 01.12.2019 அன்று அவர்களிடமிருந்து பெறப்பட்டதாக வட்டாட்சியர் மூலமாக பெறப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது. எங்கள் அலுவலகத்திற்கு 10 நாட்கள் கழித்து தான் அனுப்பப்பட்டது என்றால் சரிதான். ஒரு வருடம் மூன்று மாதங்கள் கழித்து இந்த அறிக்கையை காவல்துறையினர் பெற்றிருக்கிறார்கள் என்றால் சரிதான். பெறப்பட்ட ஆய்வு செய்யப்பட்ட கடிதத்தில் பாலாஜி என்ற பெயரில் இல்லை சிங்கம் பாலாஜி என்று தான் இருந்தது என்றால் சரிதான். ஒப்புக்கொள்ளப்பட்ட கையெழுத்து அடங்கிய ஏ1 முதல் ஏ27 வரையிலான ஆவணங்கள் எந்தெந்த தேதியில் கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி கடிதத்தில் ரவிச்சந்திரன் ஆசிரியர் என பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆய்வாளர் அறிக்கை கொடுத்தபிறகு தான் விசாரித்தார்.

மறுவிசாரணை இல்லை.

ஒப்பம் / P.S. ரஸ்கின் ராஜ், 21.06.2024.
சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.

/ உண்மை நகல் /

சார்பு நீதிபதி, உசிலம்பட்டி.